www.padippakam.com



# அரசியல் தீர்மானம்

## - ஒரு நகலறிக்கை

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

மூன்றாவது பாதை

படிப்பகம்

www.padippakam.com

3. தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டம் – (அ). தமது தேசிய உரிமையை ஒருபோதும் விட்டுக்கொடுக்காது. அதை வென்றெடுக்கும் உறுதி மிக்கதாகவும், (ஆ). பிராந்திய வல்லரசு மற்றும் இலங்கை ஆளும் வர்க்கங்கள், ஏகாதிபத்தியங்களுடன் சமரசம் செய்வதனூடாக ஒருபோதும் சாதிக்கப்பட முடியாததொன்றாகவும்,
(இ). பரந்துபட்ட மக்களின் ஐக்கியத்தாலும், உறுதியாலும், அரசியல் பலத்தாலும் உருவாக்கப்படும் மக்கள் யுத்தத்தால் மட்டுமே சாத்திய மானதொன்றாகவும்,
(ஈ). தமிழ்த் தேசிய இனத்தின் அனைத்து ஒடுக்கப்படும் தேசிய வர்க் கங்களும் இணைந்த இப் போராட்டம் அவற்றுக்கிடையேயான முரண் பாடுகளை தேசிய முரண்பாட்டுக்கும் கீழ்ப்படுத்திசிநேகபூர்வ வழிகளில் கையாள்வதினூடாகவும்,
(உ). போராட்டத்தில் ஐக்கியப்படுகிற அனைத்துப் புரட்சிகர வர்க்கப் பிரிவினரும் தமது சொந்த நலன்களினடிப்படையில் தமக்கான தனித்துவ ஸ்தாபனங்களைக் கொண்டிருக்கும் ஜனனாயகம் உத்தரவாதப்படுத்தப்படு வதாகவும், ஆயினும் இந் நலன்கள் ஐக்கிய முன்னணியின் குறிக்கோள் களைப் பாதிக்காவண்ணம் அதன் நலன்களுக்குக் கீழ்ப்பட்டு அனுசுப்படு வதாகவும் அமைவதன் மூலம் தனது வளர்ச்சிப் பாதையை வகுத்துக் கொள்வதாக இருக்கும்.

4. (அ) முஸ்லீம் மக்கள் தமிழ்த் தேசிய இனத்தின் ஒரு பகுதியினரோ, அதற்குக் கீழ்ப்பட்டவர்களோ அல்லர். மாறாக அவர்கள் தனித்துவமான இனப் பகுப்பைச் சேர்ந்தவர்கள். அத்தோடு எமது போராட்டத்தின் ஊக் கமிகு பங்காளிகளுமாவர். இவர்களிற்கான அரசியலதிகார அமைப்பு முறைகள் பூரண சுயாட்சி அதிகாரம் கொண்டவையாக அமைதல் வேண் டும். எம்முடன் அவர்கள் ஐக்கியப்படுவதற்கு மேலாக அவர்களது இணைவு குறித்த முடிவு அவர்களது சுயநிர்ணய உரிமையாகும்.

(ஆ) மலையக மக்கள் தமிழ்த் தேசிய இனத்தின்ஒரு பகுதியினரோ அதற்குக் கீழ்ப்பட்டவர்களோ அல்லர். மாறாக அவர்களும் தனித்துவ மான இனப் பகுப்பைச் சேர்ந்தவர்களே. எமது போராட்டத்தின் ஊக்க மிகு பங்காளிகளாகவும் இவர்கள் இருப்பர். மலையக மக்கள் வாழும் பிரதேசங்கள் அவர்களது சொந்தப் பிரதேசங்களாகக் கணிக்கப்படுவ தோடு அப் பிரதேசங்களில் பூரண சுயாட்சி அதிகாரம் கொண்டதும், அவர்களது இன உருவாக்கத்தை வளர்த்தெடுப்பதுமான அரசியலதிகார அமைப்பொன்றினை உருவாக்குதல் வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

5. சிங்கள மக்கள் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் எதிரிகளோ, தமிழ் மக்களின் எதிரிகளோ அல்லர். அவர்களும் எமது பொது எதிரியால் ஒடுக்கப்படுபவர்களே. ஆயினும் தேசிய ரீதியில் சிங்கள் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் பௌத்த சிங்களப்பேரினவாத சிந்தனைப் போக்கினை களைந்தெறியாதவரை அவர்கள் நமது போராட்டத்தின் நியாயத்தன்மையைப் புரிந்துகொள்ள முடியாது. எனவே அவர்களை அந்தச் சிந்தனையிலிருந்து விடுவிக்க, நாம் எமது போராட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலமே அவர்களுக்கு உதவ முடியும். சிங்கள மக்கள் தற்போது ஒருவகை மறைமுக சேமிப்புச் சக்திகளாவர்.

6. இந்திய வல்லாதிக்க அரசு தமிழ்த் தேசிய விடுதலையினதும், இலங்கையின் சுயாதிபத்தியத்தினதும் எதிரியாக இருப்பினும் கூட, அதனால் ஒடுக்கப்படும் இந்திய மக்களும், அவர்களின் புரட்சிகர அமைப்புகளும் எமது நட்புச் சக்திகளே. அவர்களது ஆதரவு எமது போராட்டத்தின் வெற்றிக்கு கணிசமானளவு முக்கியமானதாகும்.

7. எமது எதிரிகளையும், நண்பர்களையும் இவ்வாறு வகைப்படுத்தலாம்:

(1) அ. இலங்கை பௌத்த சிங்களப்பேரினவாத அரசு தமிழ்த் தேசிய இனத்தின் முதல் எதிரி.

ஆ. இந்திய வல்லரசு எதிரியின் கூட்டாளியும், எமது பிராந்திய எதிரியுமாகும்.

இ. அமெரிக்கா தலைமையிலான இன்றைய சோவியத் உள்ளிட்ட ஏகாதிபத்தியக் கூட்டினர் எமது சர்வதேச எதிரிகளாவர்.

ஈ. நிலவும் நவகாலனிய அரைநிலபிரபுத்துவ அமைப்பு.

(2) அ. தமிழ்த் தொழிலாளர்கள், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய வர்க்கங்களும் எமது சக்திகளாவர்.

ஆ. முஸ்லீம், மலையக மக்கள் ஆகியோர் எமது உறுதியான நண்பர்களும், பங்காளிகளுமாவர்.

இ. சிங்கள மக்கள் நமது மறைமுக சேமிப்புச்சக்திகளாவர்.

ஈ. இந்திய மக்கள்/தமிழ்நாட்டு மக்கள் எமது மறைமுக சேமிப்பு சக்திகள் ஆவர்.



படிப்பகம்

www.padippakam.com

(3) அரசியல் கட்சிகள்:

அ. *தமிழர் விடுதலைக் கூட்டணி:* இலங்கையின் தமிழ்த் தரகு முதலாளித்துவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இக் கட்சி தமிழ் மக்களின் தேசிய விடுதலையின் நம்பகமான கூட்டாளி அல்ல. தமிழ் தரகு முதலாளியமும் தேசிய இனப் பிரச்சினையில் ஒரு ஒடுக்கப்படும் வர்க்கமாக இருப்பதால் இது ஒரு ஊசலாடும் கூட்டாளியாக இருக்கும் தன்மையுள்ளது. ஆயினும் தீர்மானகரமான வேளைகளில் காட்டிக் கொடுக்கவும், துரோகமிழைக்கவும் தயங்காது.

ஆ. *தமிழீழ விடுதலைப் புலிகள்:* தமிழ் முதலாளித்துவ தேசியவாதப் போக்கைப் பிரநிதித்துவப்படுத்தும் இவ்வணியினர் தமிழ் மக்களின் பாதி வழிக் கூட்டாளிகளே. இன்று போராட்டம் இவர்கள் கைக்கு வந்துள்ள போதும், தேசிய விடுதலையை இவர்களால் சாதிக்க முடியாது. இவர்கள் எதிரியுடன் குறிப்பிட்ட சில நலன்களின் அடிப்படையில் பாதி வழிச் சமரசத்திற்கு உட்படுவார்கள். அந் நலன்கள் தமிழ்த் தேசிய முதலாளித்துவ நலன்களாக இருப்பதால் இலங்கை அரசால் அதை விட்டுக் கொடுக்க முடியாமலுள்ளது. இந்த நிலை இவர்களைப் போராட்டக் களத்தில் தமிழ் மக்களின் கூட்டாளியாக வைத்துள்ளது. தமிழ் மக்களின் விடுதலையும், இவர்களது விடுதலை நோக்கும் - அடிப்படையில் இவர்களின் வர்க்க உணர்வு சுரண்டும் வர்க்க இயல்பாக இருப்பதால் - முரண்படுகிறது. முதலாளித்துவ தேசியவாதத்தைக் கடைப்பிடிக்கும் இவர்கள் இம் முரண்பாடுகள் காரணமாக மட்டுமீறிய அச்சம் கொள்வதால் பிற சக்திகளின் ஜனநாயகத்தை மறுக்கிறார்கள். ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் "தேசியம்- ஜனநாயகம்" இரண்டினதும் கூட்டுப் படைப்பு என்பதை இவர்கள் புரிந்து கொள்ளாததால் இவர்களது சனநாயக மறுப்பு, போராட்டத்தை மேலே முன்னேற முடியாமல் தடுக்கிறது. இவர்களது சனநாயக மறுப்பு இவர்களே விரும்பும் "விடுதலை"க்கு நேர் விரோதமான பலனையே தருகிறது.

இ. *பிற தமிழ்க் கட்சிகள்:* இக் கட்சிகளின் வர்க்க அடிப்படை குட்டி பூர்சுவா அடிப்படையே. தமக்கென உறுதியான வர்க்க அடித்தளம் இல்லாததால் இவை எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டுள்ளதுடன் அவற்றின் ஏவலாளிகளாகவும் உள்ளன. போராட்டத்திற்கு துரோகம் இழைப்பதும், சார்பாகப் போராடுவதும் அந்தப் போக்கின் அடிப்படையாக உள்ளது. ஆனால் இப் போக்கினர் விரைவில் தமது சொந்த மக்கள் அடிப்படையை இழந்து ஒதுங்கிப் போதலே சாத்தியம் அல்லது தமிழ் தரகு முதலாளிய சக்திகளுடன் கூட்டுச் சேர்வார்கள். இவர்களு

படிப்பகம்

www.padippakam.com

டைய தேசியவாதம் தமிழ் தரகு முதலாளிய தேசியவாதத்தினை விட முன்னேறியதல்ல.

ஈ. *சிறு குழுக்கள்:* தமிழ்த் தேசிய விடுதலையில் ஈர்க்கப் பட்ட குட்டி பூர்சுவா வர்க்கத்தின் புரட்சிகரப் பிரிவினைக் கொண்டுள்ள இக் குழுக்களும் போக்கிடமற்றவையாக உள்ளன. புலிகளுடனோ அல்லது புலி எதிர்ப்பு முகாமுடனோ நட்புக் கொள்ளும் போக்குகளை இவை கொண்டுள்ளன. மூன்றாவது பாதை ஒன்று உருவாகின் இவர்கள் அதன் கூட்டு அல்லது அதன் சக்திகளாவர். தனித்துவமான இயல்பற்ற இவர்கள் சார்ந்து நிற்கத் தேடும் சுவராக இன்று புலிகள் அல்லது புலி எதிர்ப்பு முகாம் மட்டுமே உள்ளன. இதிலும் புலி எதிர்ப்பு முகாம் எந்த வகையான ஸ்தாபனமும் அற்றது. எனவே புலி எதிர்ப்பு முகாமைத் தேடுபவர்கள் சோர்வு வாதத்திற்கும், விரக்திக்கும் ஆளாகின்றனர்.

8. எமது மூன்றாவது பாதையைக் கட்டியெழுப்ப நாம் கையாளும் வழிமுறை:

(1) அ. எதிரிகளை அம்பலப்படுத்துதல்.
ஆ. பாதி வழிக் கூட்டாளிகளின் தவறுகளை இனம் காட்டுதல்.
இ. ஊசலாடும் நம்பகமற்ற கூட்டாளிகளை இனம் காட்டுதல்.
ஈ. ஊசலாடும், துரோக நிலையெடுத்தோரின் அரசியல் துரோகத்தை இனம்காட்டி அதன் அணிகளை வென்றெடுத்தல்.
உ. ஊசலாடும் புரட்சிகர அணியை வென்றெடுக்கப் போராடுதல்.
ஊ. தத்துவார்த்த அரசியல் விவாதங்களை நடாத்துதல்.

(2) அ. பாராளுமன்றப் பாதையை, சமரசத்தை, பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினை தீர்க்கப்படலாம் என்ற போக்கை அம்பலப்படுத்துதல்.
ஆ. கடந்தகாலப் போராட்ட அனுபவங்களை கேள்விக் குள்ளாக்குதல்.
இ. போராட்டத்தில் நடக்கும் நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்தல், விவாதித்தல்.
ஈ. ஆயுதப் போராட்டம், சுயநிர்ணய உரிமை போன்ற எமது அடிப்படைக் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்தல்.

---

*குறிப்பு: பாதுகாப்புக் காரணங்களுக்காக தொடர்பு முகவரி தரப்பட வில்லை. இவ்வறிக்கை உங்களுக்குக் கிடைக்கும் வழியினூடாக தொடர்புகொள்ளுங்கள்.*



படிப்பகம்

www.padippakam.com



*இவ்வறிக்கை விவாதத்திற்காக சுற்றுக்கு விடப்படுகிறது.*
*இது பற்றிய உங்கள் அனைவரதும் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன.*
*இவ்வறிக்கையை மேலும் செழுமைப்படுத்த உதவும் வகையில் உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள்.*
*இவை பற்றிய விவாதத்தின் பின் அறிக்கை முழுமையானதாக வெளியிடப்படும்.*
*இதுவரை - இவ்வறிக்கை அச்சிடப்படும்வரை - தெரிவிக்கப்பட்ட கருத்துகள் வருமாறு:*

1. முஸ்லீம் மக்கள். மலையக மக்கள் ஆகியோரைப் பற்றிக் குறிப்பிடும் பகுதி 4(அ),(ஆ) ஆகியவற்றில் அவர்களை "தேசிய இனம்" என்று குறிப்பிட வேண்டும். (பிரான்ஸ்)

2. "தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியில், அவர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் போக்குடன் சிங்கள மக்கள் மத்தியிலிருந்து மக்களாதாரவுள்ள புரட்சிகர எழுச்சி ஏற்படும் நிலை உருவாகும் பட்சத்தில் தமிழீழம் அல்லது தனிநாடு என்ற கருத்து மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படும்" என்ற குறிப்பும் சேர்க்கப்பட வேண்டும். (ஜேர்மனி)

*இவை பற்றிய உங்கள் கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.*

*- மூன்றாவது பாதை.*



படிப்பகம்